உ

சிவமயம்.

"துறவி"

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	வைகாசி இதழ் 5

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர் :

சுவாமி சொருபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/-   தனி இதழ் அணா 3/-

ஓம்.

" துறவி "

பொருளடக்கம்.

ஓம்:

" துறவி "

மன்மத மலர்-1	தமிழ் திங்கள் வெளியீடு.	வைகாசி இதழ்-5

கடவுள் வாழ்த்து.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. —சம்பந்தர்.

இருவகைச் சார்பாம் புறப்பற்றை நீக்கி இச்சையின் மீட்டதி
னினைவு, மொருவியே யுடற்கா வலையுங்கை விடுத்தே யுட்
கர ணங்கள்வா தனையுங், குருவரு ணெறியே யொடுக்கிடில்
வீடுங் கூடுந்தா னாகவே பவத்தின், கருவழிந் திடுமிந் நெ
றியைநீ விரைவிற் கைக்கொண்டு செல்லென வுரைத்தார்.

-மகாராஜா துறவு.

அன்பே சிவம்.

எல்லாம் வல்ல இன்புருவாய இறைவனை அன்பினால் வழிபடுவோமாயின் என்றும் நிலைபேறுயுள்ள சிவத்தை (வீட்டினை) உணர்ந்து இன்பவடிவாகவே இருக்கலாம். அன்பு வேறு சிவம் வேறு அல்ல. அன்பே சிவம் ஆம். "அன்பு சிவ மிரண்டென்ப ரறிவிலா அன்பே சிவம்..." என்பது திருமந்திரம். ஆகவே அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் நிற்கும். இடையறாது முறுகிவளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவம் விளங்கும் "அன்பினில் விளைந்த ஆரமுதே..." என்பது மணிவாசகர் திருவாக்கு. அன்புதான் எவ்வாறுண்டாம் எனின், இறைவனது பெருமையினையும் நமது சிறுமையினையும் இடையறாது எண்ண வேண்டும் "ஆய நான் மறையவனும் நீயே யாதல் அறிந்து யான் யாவரினுங் கடையனாய! நாயினே னாதலையும் நோக்கிக் கண்டு நாதனே நான் உனக்கோர் அன்பன் என்பேன்..." என்பது திருவாசகம். இறைவனிடத்து அன்புடைமைக்கு அடையாளம் அவ்விறைவனுடைய உண்மையை நினைத்தல், கேட்டல், காண்டல் செய்த பொழுதே தன் வசம் அழிதலும், மயிர்க்கால் தோறும் திவலைஉண்டாகப் புளகம் கொள்ளலும், இன்ப அருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும், உரை தடுமாறலும், ஆடலும், பாடலும், இறைவன் உவப்பன செய்தலும் வெறுப்பன ஒழிதலும் ஆம். இவ்வன்பு இல்லையாயின், இறைவனை ஒருவாற்றானும் உணர முடியாது. "என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப், பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினு, மன்போ டுருகி யகங் குழைந்தார்க்கன்றி, யென் போன் மணியினை யெய்த வொண் ணாதே" என்பது திருமந்திரம். ஆகவே உலகம் பழித்ததை ஒழித்து இறைவனை அவிழ்ந்த அன்பால் இடையறாது வழிபடுவோமாக.

—பதிப்பாளர்.

நீதித் துண்டுகள்.

தவத்திரு. குக. சதாசிவ அடிகளாரவர்கள்
(சங்கேந்தி)

முன் (மலர் 1 இதழ் 4 பக்கம் 37) தொடர்ச்சி.

17 மனத்தை நல்வழியில் நிறுத்துதலும், யாவர்க்கும் இதமாய் நடக்கும் இனிய தன்மையும், ஏழைகளுக்குக் கொடுத்தலும், பிறர் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளு மியல்பும், பொய் பேசுதலின்மை-யும், புலால் புசித்தலின்மையும் உடையவன், பல பிராணிகளுக்கும் தாய்போன்றவ னென்று சொல்லத்தகுவான்.

18 நன்றாகப் படித்து அவ்வறிவுகொண்டு பரசமய வாதிகளை வாதப்போரில் வெல்வது எளிது, ஞான நிட்டை கைகூடி முத்தி-பெறுதல் அரிது. நல்ல ஆடை யாபரணங்களைத் தரித்துப் பெருமை பாராட்டுவதும், சன்மார்க்கத்தி னிலையற்றிருப்பதும், கற்று வாதி-யரைவென்று செருக்குறுதலுந் தகுதியல்ல.

19 ஒருவர் முன்னிலையிலன்றிப் புறத்திலே அவரை இகழ்ந்து இல்லாத குற்றங்களைக் கற்பித்துக் கூறுதல் பெரும்பாவம். அன்றி அவரிடம் உள்ள குற்றங்களை வெளிப்படுத்திச் சொல்லுதலும், அக் குற்றவாளியின் மனம் வருந்தக் காரணமாகும். ஆதலால் அதுவுஞ் செய்யாத நற் குணங்களுள்ளவன் அந் நல்வினைப் பயனால் இந்திர-னாவான்.

20 பெருந்தன்மையும், கீர்த்தியும், தரும மார்க்கமும், ஞானமும், அனுட்டானமும் இல்லாதவர்கள் அயோக்கியர்கள். அவர்கள் ஒரு வனிடம் சேர்ந்தால் அத் தீயினச் சேர்க்கையாகிய தீங்குகளால் அவ-னிடத்துப் பெரும்பாவம் முதலிய கொடுமைகள் தவறாமலுண்டாகும். அதனால் அவன் இம்மை மறுமைப் பயன்களை யிழப்பன்.

21 தாய் குழந்தையைச் சிறிது வருத்துதல் அதன் நன்மை யைக் குறித்த அன்பின் செயலாகும். அதுபோலப் பெரியார் சிறியோ ரைச் சிறிது கடிந்து வலிய அவர்க்கு அறிவுறுத்தல், அவரது நன்மை யையே குறித்த அன்பின் செயலேயாம்.

22 சீவகனென்னும் அரசகுமாரன் இளமையில் தோழருடன் நகர்ப்புறச் சோலையில் விளையாடிக் கொண்டிருந்தான். அச்சமயம் மகா பண்டிதனான ஒரு முனிவன் வந்து, குமாரா! சமீபமாக இவ்விடத்து ஊருண்டோ? என்று வினவ, சீவகனும் புன்சிரிப்புக் கொண்டு சிறு

பிள்ளைகளாகிய நாங்கள் இங்கு விளையாடுவதைக் கண்டதனுல் ஊர் சமீபத்ததே யென்பது சொல்லாமலே விளங்க வில்லையோ? என்று சொல்ல, அதுகேட்டு அத்துறவி மனமுவந்தனன் ஆதலின் சக்கரம் கழலாதபடி அச்சின் கடையிற் சொருகும் அச்சாணி மிகப்பெரிய தேர்க்கு இன்றியமையாது ஆதரவாவதுபோல நிரம்பக்கற்ற பேரறி வினர்க்கு ஆதாரவாகத்தக்க ஒரு சொல் சிற்றறிவினரிடத்தும் உண்டா கலாம்.

23 ஒருவரோடொருவர் நட்புச் செய்தல் தாமிருவருங்கூடிக் கண்டபடி பேசி விளையாட்டு வகையால் மகிழ்தற்கேயன்று; தம்மில் ஒருவருக்கொருவர் சத்விஷயங்களை எடுத்துக்கூறி இருவரும் நல்வழிப் படுதற்பொருட்டேயாகும். இங்ஙனம் இம்மை மறுமைக்கேற்ற தரும நூற் பொருள்களை எடுத்துக் கூறும் மேன்மை யுடையவர்களே நண்ப ரென்று சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்றவராவர்

24 பக்ஷபாதமாக ஒன்றினிடத்து விருப்பம் வைத்தால் அதன் தோஷமும், வெறுப்பு வைத்தால் அதன் குணமும், தெரியாதாதலால் அறிவுடையோர் ஒவ்வொரு பொருளின் குணகுணங்களையும் விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலைமையில் நின்று ஆராய்ந்து உள்ளபடி உணர்வர்,

25 நன்னெறியானது பெருமையின் சிறப்பையும், தகுதியாகிய ஊக்கத்தின் சிறப்பையும், மனத்திற் குற்றமில்லாமல் நன்னூற்களைக் கற்றலும், தங்கடமைகளை அறிந்துகொள்ளுதலும் கல்வி கற்றவர்களின் சேர்க்கையுடையவராய் நிற்பதுமாகிய எல்லையை யுடையது.

26 துறவிகட்கும், வறியவர்கட்கும், கதியற்றவர்கட்கும், தன் னிடம் வந்து யாசித்தவர்கட்கும், சுற்றத்தார்க்கும் துணைசெய்தல் கிருகஸ்தாச்சிரம தருமம்; மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழல் தருதல்போல தனக்கு விரோதியாயுள்ளவன் தன்னிடம் வந்தால் அவனுக்கும் ஆவன செய்தல் விசேஷம். இவ்வகை நல்லொழுக்கமுடை யவனுக்கு இல்லறமே துறவறத்தினும் மேம்பட்டது. இங்ஙனம் பொருமை மேற்கொண்டு பிறர்க்கெல்லாம் உதவும் மேன்மை துறவறத்திலில்லை,

27 கருவுறுதல், கருமுதிர்தல், கருவுயிர்த்தல் என்ற காரணங்களால் வலிமை தளர்ந்து தமக்கு வேண்டியவற்றைத் தாமே செய்துகொள்ள மாட்டாத மகளிர்கட்கும், பிறருதவியாலேயே வளர வேண்டிய குழந்தைகட்கும், தற்காக்குந் திறமில்லாது மதிமயங்கியவர் கட்கும், பெருங்காற்றிலடிபட்டுத் திகைத்தவர்கட்கும் இரக்கங்கொண்டு துன்பந் தவிர்த்து உணவளித்து உதவியவர்பிறர்க்கெல்லாம் கொடுக்கத் தக்க பெருஞ் செல்வமுடையவராகிக் குடும்பத்தோடு இனிது வாழ்வர்

(தொடரும்)

மானிடப் பிறவியின் அருமை.

தவத்திரு. சுவாமி அருணகிரிநாதர் அவர்கள்
(த. நா. து. சங்க அமைப்பாளர்,
குளப்பாக்கம், சென்னை.)

முன் (ம 1 இ 4 39-ம் பக்கம்) தொடர்ச்சி.

பன்னெடுங் காலத்துக்குமுன், சம்பரன், சம்பாதி என்ற மாதவர் இருவர் அம்மை யப்பனை நோக்கித் தவங்கிடந்தனர் பல நாள். அத்தவத்திற் கிரங்கி இறைவன் உமையோடு வெள்விடைமேற் காட்சி யளித்து உமக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள் என்றார். அதற்கம் மாதவர்கள் தவங்கிடந்து கோரியதை மறந்து பிறிதொன்றைக் கேட்டார்கள். அதற்கு இறைவன் ஏ! மாதவர்களே! உயர்ந்த இலட்சியத்தைக் கோரி பன்னாட்டவங் கிடந்தும் அதை மறந்து தாழ்ந்த பிறிதொன்றைக் கேட்டபடியால் மிக வுயரப்பறந்தும் தரை யிடைக் கிடக்கும் தீ நாற்ற முடைய பிணவாடையை முகர்ந்து உயர்ந்த நிலையிலிருந்து இழிந்து கீழிறங்கி அழுகிய பிணத்தை நுகரும் கழுகாகப் பிறக்கக்கடவீர், என்று சாபத்தைக் கொடுத்தார். உடனே அவ்விரு மாதவரும் இறைவனடியில் வீழ்ந்து அழுது தொழுது யாங்கள் முன் செய்த தீவினை இங்ஙனே இவ்வாறு வந்து மூண்டது. என்செய்வோம் எந்தையே! மீண்டும் இந்த மானிட யாக்கையைப் பெற்று உம்மை நோக்கி மாதவம்புரிந்து, உமது திருவடிப்பேற்றைப் பெற்றின்புறும்படி, அருள் புரிய வேண்டுமெனக் குறையிரந்து வேண்டிக் கொண்டார்கள். இறைவர் திருவுளமிரங்கி, ஏ! மாதவர்களே! தண்டமிழ் நாட்டில் தமிழ் மறைகளால் எம்மைப் பூசிக்கப்பட்டமையால் மறைமலை யெனப்பெயர் பெற்றுள்ள திருத்தலத்திற்குச் சென்று, அங்கு கழுகுவடிவோடு மலைவலம் செய்து, எமது நைவேத்தியப் பிரசாதத்தை உட்கொண்டு வருவீர்களானால், ஒருகாலத்தில் இக்கழுகுப் பிறப்பொழிந்து மக்கட் பிறப்படைந்து மாதவஞ் செய்து எம்மை அடைவீர்கள் என்றருளிச் செய்து மறைந்தனர். உடனே அம்மாதவரிருவரும் கழுகுப் பிறப்படைந்து, பின்பு தன்பெயரால் விளங்கும் திருக்கழுக்குன்றத்தை யடைந்து பறந்து மறைமலையை நாள்தோறும் வலஞ் சூழ்ந்து, உச்சிக் கால பூசை மணியோசை கேட்டு, பட்சி தீர்த்தத்தருகில் பாரைமேல் ஆதனத்தில் அமர்ந்துள்ள சைவ பண்டாரத்தையா அவர்களின் அருகில் பறந்து வந்தமர்ந்து, இறைவர்க்கு நிவேதனம் செய்த சருக்கரைப் பொங்கற் சோறும் நீறும் பண்டாரத்தையா கையாற் கொடுக்க வாயால் வாங்கியுண்டு நீரையும் பருகி பக்தர்களுக்கு நாள்தோறும் காட்சியளித்துப் பன்னெடுங்காலம் திருக்கழுக்குன்றத்திலேயே வாழும் கழுகுகளாகிய அச்சம்பரன், சம்பாதிகட்கு இன்னும் கழுகுப் பிறவி

நீங்கி மக்கட் பிறவி கிடைக்கவில்லை யென்பதைக் கண்கூடாக நமக்கே காட்டிக் கொண்டிருக்கின்றன அக்கழுகுகள் திருக்கழுக்குன்றத்தில் ஆகவே

பெறுதற் கரிய பிறவி இதன்போக்
கறிதற் கரிய அவதி—பிறிதொன்றை
நாடுதற்கு நேரமுண்டோ நன்னெஞ்சே முத்திநெறி
கூடுதற் கல்லாலநீ கூறு. என்றபடி

அரிதாகிய மக்கட் பிறவியைப்பெற்ற நாம் பிறவிப்பயனாகிய முத்தியை அடைதற்குத் தடையாயுள்ள. நாத்திகராகிய முத்திநெறி அறியாத மூர்க்கர்களுடைய கூட்டுறவை அறவே யொழித்து, முத்திக்கேதுவாகிய பத்திநெறியறிந்த பண்புடையாளரின் கூட்டுறவைப் பெற்று சரியை, கிரியை, யோக முதலிய சாதனங்களிற் பழகிக் கைவரப்பெற்று ஞான சாதனங்களாகிய. நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகாமுத்ரார்த்த பல போக விராகம், சமாதிஷட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம், ஆகிய நான்கையும் அடைந்து, தீவிர முத்தி விருப்புடையவனாகி, பிரமவித்தாகிய ஞானாசிரியனை யடைந்து மலர் தூவி வணங்கி, குறையிரந்து, குற்றேவல் செய்து, சிவப்பிரம ஐக்கியத்தைக் கூறும் ஞான நூல்களை ஐயந்திரிபறப் பாடங்கேட்டு. முடிவில் "தத்துவமசி" மகா வாக்கிய உபதேசச் சிரவணம் செய்து, மனன நிதித்தியாசனப் பயிர்ச்சியால் அகநாட்டத்தில் அமர்ந்து "சிவோகம்" பாவனைசெய்து திடம் பெற்று, சிவபெருமான் திருவருளால்சித்தத்திலுள்ள மும் மலங்களையும் அறுத்தொழித்து, ஆன்மாவாகிய தான் சிவமாகி நின்று சிவானந்தப் பெருவாழ்வை அடைவதாகிய முத்தியைப்பெற வேண்டும் இதுவே அரிதாய மானிடப் பிறவியை எடுத்ததினாலாய பயனும்.

முற்றும்.

சைவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.

முன் (ம 1 இ 4 ப 44) தொடர்ச்சி.

இம் மங்கலமாகிய வஞ்சித் துறைக்கண் கல் என்பது முதலாக ஏ என்பது இறுதியாகப் பன்னிரு. சொற்களைக் கூறவே, பன்னிரு சூத்திரத் தாலிந்நூல் ஆக்கப் பெற்றதெனவும், இதனுள் அடிவொன் றுக்கு மும்மூன்று சொற்களை வைத்து நான்கடியாக்க் கூறி, இந் நூ லுள்ளும் இயலொன்றுக்கு மும்மூன்று சூத்திரங்களை வைத்து நான்கியலாக் கூறினாரெனவும், அவற்றுள்ளும் முன்னிரண்டடியினையும் ஒரு வினை முடிபாகவும், பின்னிரண்டடியினையும் பிறிதோர் வினை முடிபாகவும் வைத்து, இந்நூனுள்ளும் முன் ஆறு சூத்திரங்களையும் ஓரதிகாரமாகவும், பின் ஆறு சூத்திரங்களையும் பிறிதோர் அதிகாரமா கவும் வைத்துளா ரெனவுங் கண்டு கொள்க,

இனி முதலியல் பிரமாணங் கூறுவதென்பதை யுணர்த்து வதற்கு முதலடியில் கல்லானிழல் என இடங் கூறினர் என்வும், இரண்டாமியல் இலக்கணங் கூறுவதென்பதை யுணர்த்துவதற்கு இரண்டாமடியில் மலைவில்லார் அருளிய எனச் செய்கை கூறினர் எனவும், மூன்றாமியல் சாதனங் கூறுவதென்பதை யுணர்த்துவதற்கு மூன்றாமடியில் பொல்லார் இணைமலர் எனத்திருவடி கூறினர் எனவும் நான்காமியல் பயன் கூறுவதென்பதை யுணர்த்துவதற்கு நான்கா மடியில் நல்லார் புனைவர் எனப்பேறு கூறினர் எனவும் ஓர்ந்துணர்ந்து கொள்க. இங்ஙனம் நூலினுட் பொருளை யெல்லாந் தன்னகத் தடக்கி நிற்றலும் மங்கலத்திற் கிலக்கணமென்பதூஉம் கண்டு கொள்க. இம் முறையே இந்நூல் நால்வகைப் படுத்துக் கூறிய தென்பதை "ஈண்ட ளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி முறைமைகளும் பெத்த மொடு முத்தியெல்லாம்" எனச் சிவஞான சித்தியாரில் வகுத்தோதிய வாற்றானும் உணர்க. மலைவில்லார் அருளிய பொல்லார் தாள் நல்லார் புனைவர் எனவே அவ்விருவருக்குந் தம்முள் வேற்றுமை யின்மை பெற்றாம். உலகத்துப் புதல்வர் மாட்டுச் செய்யும் வழிபாடு ஜன்னிய ஜனக பாவசம்பந்தத்தால் தந்தையர்க்குக் கழிபேருவகை பயக்குமா கலின் அந்வயம் பற்றி அங்ஙனம் கூறியதாம் என்க,

அவையடக்கம்.

மங்கலங் கூறுமுகத்தான் இவ்விடத்து முதற்கடவுளாவான் இன்னனென்ப துணர்த்தி, இனியவையடக்கங் கூறுமுகத்தான் அம் முதற் கடவுளாலியம்பப்படும நூலுணர்ந்தாரது உயர்வும், ஏனைச் சமய நூலுணர்ந்தாரது தாழ்வு முணர்த்துகின்றார்.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்."

இ—ள், தம்மை உணர்ந்து – உடைப்பொருளாகிய தம்மியல்பினை யுணர்ந்து, தமையுடையதன்-தம்மை யுடையானாகிய தலைவனை, உணர்வார்—அறியுஞ் சித்தாந்த சைவர், எம்மை உடைமை—தமக்கு உடைப் பொருளாகிய எம்மை உடையா ராகலின், எமை இகழார்-எம்மைக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு சீராட்டுவதன்றி இகழ்தல் செய்யார் தம்மையுணரார் - தம்மியல்பினை உணராதார், உணரார் - தம்மையுடையானாகிய தலைவனையும் அறியாராகலின், உடங்கு இயைந்து-அவர் ஒருங்கே குழீஇக்கொண்டு, தம்மிற் புணராமை-தம்மிற்றாமே சேராது மாறுகொள்ளலான், புறன்-அவர் எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைக்கும் புறமொழியை, கேளாம்—பொருளாகக் கொள்ளோம்.

குருமுகத்தாற் கேட்கப்படுஞ் சிவாகம நூல் வழியானேயுணர வேண்டுமாகலின் "தம்மை யுணர்ந்து" எனவும், சிந்தாந்த சைவர் தலைவனுக்கு அடிமைப் பொருளென்பார், "தமையுடையதன்" எனவும், யாம் அவர்கட்கு அடிமைப் பொருளென்பார் "எம்மை யுடைமை" எனவும் கூறினார். அடிமையும் உடையுமென உடைப் பொருள் இருவகைப்படுமெனவும், அவற்றுள் உயிர்வர்க்க மனைத்தும் அடிமையெனவும் மாயை கன்மங்களும், அவற்றின் காரியங்களும் உடைமையெனவுங் கண்டுகொள்க.

தன்னுணர்வாரென்றவிடத்து இரண்டனுருபும், உடைமை யெமை என்றவிடத்து ஏதுப் பொருட்கண்வரும் இன்னுருபும், புணராமை கேளாம் என்ற விடத்து ஆனுருபும் தொக்கு நின்றன.

எம்மாற் செய்யப்படும் நூலையும் குற்றங்கள் நீக்கிக் குணங் கொண்டு கோதாட்டுவாரென்பதைக் குறிப்பான் உணர்த்துவான் "எமையிகழார்" எனவும், தம்மை யுணர்ந்தாலன்றித் தலைவனையுணர்தல் கூடாதாகலின், "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" எனவுங் கூறினர். எனவே அத்தகையோரே ஆன்மலாபப்பேறுடை

யாரெனவும், அவரே சிவமாகலின் "எம்மையுடைமை" என்றாரெனவுங் கண்டுகொள்க. "தம்மையுணரார்" எனப் பொதுப்படக் கூறிய வதனானே, உலோகாயதர், பௌத்தர், சாங்கியர், ஏகான்மவாதிகளும், தம்மை முதல்வனுக் கடிமையென்றுண ராத ஏனைச்சமயவாதிகளுமடங்குவர். பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுபரிமாணங்கொண்டு, உடையானுக்குப்பரிணாமங்கூறுதலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப்பரிணாமங் கூறுதலானும், அவருந்தம்மையுணரா ரெனவே கொள்க. "உணராருணரார்" என்றவிடத்து முன்னின்ற உணரார் எதிர்மறை வினையாலணையும் பெயரெனக்கொள்க.

இனி பிறவிக்குருடர் பலர் குழீஇக்கொண்டு, யானையைக்காண வேண்டுமென்னும் விருப்பால் அது நின்றவிடத்துச் சென்றுதங்கைகளால் ஒவ்வொருறுப்பினையுந்தடவி, யானையாவது உரல்போல்வதென்னும், முறம்போல்வதென்றும், மலைபோல்வதென்றும், உலக்கைபோல் வதென்றும, தம்முள் மாறுபட்டு ஒருவரையொருவர் மறுத்துக்கலகம் விளைத்தல்போல, சித்தாந்த சைவ நெறிநின்று ஆசான் திருவருள் பெறுதார், தத்தம் அறிவிற்கேற்பச் சமய நூல்களொவ்வொன்றினையே ஆராய்ந்து அவற்றிற் கூறும் ஏகதேசப் பொருள்களை உண்மைப்பொருளென மருண்டுகூறி, ஒருவரையொருவர் மறுத்துத்தம்முள் மாறுபட்டுக் கலகம் விளைப்பார், என்பார் "உடங்கியைந்து தம்மிற் புணராமை" எனவும், பிறவிக் குருடர் யானைபற்றிக் கலகஞ் செய்வதைக் கண்ணுடையா னொருவன் நோக்கி, இவர் யானையியல்பு தெரியாதாரெனக்கருதி, அவர்க்கதனை யுணர்த்தலுறின், தாங்கொண்டதே பற்றியவனையுந்தம்முள் ஒருவனாக வைத்து இழிவாகக் கூறுமாறு கோடலேயன்றிப் பொருளெனக் கோடல் செய்யார். அதுபற்றியக்கண்ணுடையான் வெகுளாது இவரது இயல்பு இதுவென நகையாடிச் செல்வன். அதுபோலச் சமய நூல்பற்றிப் பிணங்குவாரை நோக்கி, இவர் பொருட்டன்மை தெரியாதாரெனக் கருதியதனை யாம் இந்நூலானுணர்த்தப்புகின், அவரதனைக் கோடல் செய்யாது பயிற்சிவயத்தாற் தாங்கொண்டதேபற்றி எம்மையுந்தம்முள் ஒருவனாகவைத்து இகழ்ந்துரைப்பாராகலின், அவ்வழியவர் அறியாமை யிதுவென்று ஒழிவதேயன்றி அதனைப் பொருளாகக் கொள்ளோம் என்பார் "கேளாம்புறன்" எனவுங்கூறினர்.

இனித்தொடர்ப்பாட்டானே, புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என்னும் நால்வகைச்சமயங்கள் பற்றிச்சிறிது கூறுதும்:— அவற்றுள் புறப்புறச்சமயம், உலகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌந்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் என அறுவகைப்படும். புறச்சமயம், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், என அறுவகைப்படும். அகப்புறச்சமயம், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும். அகச்சமயம், பாடாண

வாதம், பேத வாதம், சிவசம வாதம், சிவசங்கிராந்த வாதம், ஈஸ்வர அவிகார வாதம், சிவாத்துவித வாதம், என அறுவகைப்படும இந் நால்வகையுள் புறப்புறச் சமயத்தைப் புறச்சமயத்திலும் அகப்புறச் சமயத்தை அகச்சமயத்திலும் அடக்கிப் புறச்சமயம் அகச்சமயம், எனவிரண்டாகக் கொள்ளினும் அமையும். இவ்வாறு இரண்டாகத் தொகுத்தலும், அவை தம்முள் வேறுபாடு நோக்கி நான்காக வகுத்தலும் அமையும் என்பதைத் தொல்காப்பியத்துள் அகம் புறம் எனவிரண்டாகத் தொகுத்த பொருளைப் பன்னிருபடலத்துள் அவை தம்முள் வேறுபாடு நோக்கி, அகம் அகப்புறம, புறம், புறப்புறம், என நான்காகவகுத் தோதியவாற்று னுணர்ந்து கொள்க. அங்ஙன் தொகுத்தும் வகுத்துங் கூறியது கொண்டு அவ்விரு நூலும் முரணுவனவாகாமை போல, இங்ஙன் தொகுத்தும் வகுத்துங் கூறிய சமயங்களும் முரணுவனவாகாவெனவுங் கொள்க.

ஈண்டுக் கூறிய சமயத்தாருள் உலகாயதர் முதல் ஆருகதர் ஈறாகிய அறுவரும், வேதாகமங்களையுடன்படாத நாத்திகராயினும் தத்தம் நூலொன்றினைப் பிரமாணமெனக் கருதி நிற்றலான் அவர் சமயம் புறப்புறச் சமயம் எனவும், தார்க்கிகர் முதல் பாஞ்சராத்திரிகள் ஈறாகிய அறுவரும், வேதத்தைப் பிரமாணமெனப் பொது வகையாற் கொள்ளினும், அவருள் தார்க்கிகர் தன்னாற் பிராமாண்யங் கொள்ளா மையானும், வேதப் பொருளோடு மாறுகொண்டு பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டத்தையே பிரமாணமெனக் கொண்டு ஞானகாண்டத்தை இகழ்தலானும், உபநிடதவாதிகளாகிய ஏகான்ம வாதிகள் ஞானகாண்டத்தையே பிரமாணமாகக் கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைச் சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரிகளாகிய மூவரும், வேதவாக்கியங்களில் தத்தம் சமயங்கட்கு வேண்டுவனவற்றையே பிரமாணமாகக் கொண்டு ஏனையவற்றைக் கொள்ளாமையானும், இவர்சமயம் புறச்சமயமெனவும், பாசுபதர் முதலிய ஐவரும் வேதாகமங்களைப் பொதுவகையாற் பிரமாணமாகக் கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறம்பாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பு வகையாற் பிரமாணமாகக் கோடலானும், ஐக்கியவாத சைவர் வேதாகமங்களைச் சிறப்பு வகையாற் பிரமாணமெனக் கொண்டு அவற்றில் விலக்கினவொழித்து விதித்தநெறியே யொழுகுவாராயினும், ஆணவ மலத்துண்மை கொள்ளாமையானும், இவர்சமயம் அகப்புறச் சமயமெனவும், பாடாணவாத சைவர் முதலிய அறுவரும் பொருளுண்மை யனைத்துஞ் சைவசித்தாந்தத் தோடொப்பக்கொள்ளும் அந்தரங்க வுரிமையுடையாராயினும், அவ்வப்பொருள்கட்குக் கூறுஞ் சிறப்பியல்பு பொது வியல்பு மாத்திரையின் மாறு கொள்ளலால் அவர் சமயம் அகச்சமயம் எனவும் வெவ்வேறாகக் கொள்ளப்பட்டன எனவுணர்க.

(தொடரும்.)

தமிழின் பெருமை.

தவத்திரு. பொன் குமாரசுவாமி அடிகள்
(மெய்கண்டார் கழக ஆசிரியர், காஞ்சிபுரம்.)

அன்பர்களே!

இத் தெய்வத் திருமொழியாகிய தமிழ் பிங்கலந்தை நிகண்டில் தமிழ் சிவம் இனிமை என்ப என்று சமண முனிவர்களால் பேசப் படுவது. தமிழெனிங்கிளவி சிவமெனப்படுமால் என்பது இலக்கணம். ஆகவே தமிழ்தான் சிவம், சிவம் தான் தமிழ். தமிழ் வேறல்ல சிவம் வேறல்ல. இத் தெய்வத் திருநெறித் தமிழை மக்கள் முறையாக நல்லாசிரியர்பால் கேட்டுணரவில்லை. பல்லாயிர ஆண்டுகளாகத் தமிழுலகத்திற் பயின்று வருபவர்களுக்கும் தமிழ் எழுத்து எத்தனை என்றால் நூற்றுக்கிருவர்கள் அறிவார்கள். சொல்வார்கள். தமிழ் வாழ்க என்றும், இந்தி ஒழிக என்று கூக்குரலிடுவாரும், சுவற்றில் எழுதுவாரும், செந்தமிழைச் செம்மையாக உணர்ந்தவரல்லர். நால்வ ராதியர், ஆழ்வாராதியர், பட்டினத்தடிகள், தாயுமானார், அருணகிரியார் இராமலிங்கவள்ளலார், தெய்வகவிப்புலவர்களாகிய பெருமக்கள் சென்ற அடிச்சுவடு பின்பற்றி அவர்களுடைய தண்டமிழ்த் துறையில் பயின்ற வர்களல்லர். ஒருக்கால் அதிற்றேய்ந்தார் சிலரும் இறைவனிடத்து விருப்பமில்லாமலும் ஆலய வழிபாடில்லாமலும் இருப்பதாலும் வாலறிவன் நற்றாள் தொழாத அவர்களும் தமிழைச் சிவமென்று உணராதவர்களேயாவர். வேறுசிலர், தாங்கள் சிவபூசை செய்து ஆலய வழிபாடு செய்வது, தாங்களே ஆச்சார சீலராக மேலான சைவர்கள் என்று மதித்து, தம்பாடு தம்மிற் கொளின் விலக்கிய வோம்பி விதித் தனவே.செய்யும் நலத்தகையார் நல்வினையுந்தீதே என்ற குற்றவாளி களாகின்றனர், உயர்ந்த சிவபூசை முதலியன செய்வாரிவர்களும் தமிழை ஆதரிக்காமல் புறக்கணிப்பதால் இவர்களும் தமிழே சிவம் சிவமே தமிழ் என்று உணராதவராகின்றனர்.

நமது தெய்வத் திருநெறித் தமிழைப் பரவச் செய்து, சிவத்தின் பெருமையையும் உலகிற் பரப்பி, சிவந்தான் தமிழ் தமிழ் தான் சிவம் என்று நிலைநாட்டியவர் திருஞானசம்பந்த சுவாமிகளே யாவர், திருஞானசம்பந்தர் திருவவதாரத்தைச்சொல்லவந்த நம்தெய்வச் சேக்கிழார் "தாவில் சராசரங்களெல்லாஞ் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்" என்று கூறியிருக்கும் உபதேசத்தை மக்கள் உணரவேண்டும். கவுணியர் குல திலகராகும் நம் சமய குரவர், தாமே தம்மைத் தமிழ்ஞான சம்பந்தன் என்று தேவாரத்தில் சுமார் நாற்பத் தைந்து இடத்தில் கூறிமகிழ்கின்றார். இவர்கட்குப் பின் வந்த பரமாச் சாரிய சுவாமிகளும் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" "நாவின் மிசையரையன்னொடு தமிழ்ஞானசம்பந்தன்" "நற் றமிழ்வல்ல ஞானசம்பந்தன்" என்று பல இடங்களிற் கூறியுள்ளார்.

நமது ஞான சம்பந்தப் பெருந்தகையார் தமிழ்தான் சிவம் சிவம் தான் தமிழ் என்று தம் தெய்வத் திருநெறித் தமிழை சிவத் துடன் தொடர்பு படுத்தி பல அற்புதங்களைக் காட்டியிருக்கின்றனர்.

"ஓடஞ் சிவிகை உலவாக் கிழி யடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்தல்—ஏடெதிர்வைப்
பென்புக் குயிர் கொடுத்தல் ஈங்கிவைதான் ஓங்குபுகழ்
தென் புகலி வேந்தன் செயல்".

இதனால் சிவந்தான் தமிழ் தமிழ் தான் சிவம் என்பதை பாமரரும் அறிவர். அன்பர்களே! முன்னிருந்த பெரியோர் சிலர் தம்மை தமிழ் தொல்காப்பியன், தமிழ் திருவள்ளுவன், தமிழ் இளங்கோ வடிகள் என்று கூறிக்கொண்டார்கள்.

பெரியீர்!

அடைமொழிகள் எல்லாம், பிறிதின் இயைபு நீக்கல், இயை பின்மை நீக்கல் என்னும் இரு திறங்குறித்து வரும் என்று சிவ ஞான போதவுரையில், ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவர் கூறியுள்ளார், ஞான சம்பந்தன் என்னுஞ் சொல்லுக்கு முன்னே வந்த தமிழ் என்னும் அடையானது, செந்தாமரை என்னும் சொல்லில் உள்ள செம்மை யென்னும் அடையானது வெண்டாமரையின் வேறுயது என்பது விளங்க, பிறிதின் இயைபு நீக்கவந்ததாகும். இவர்க்குவந்த தமிழ் என்னும் அடையானது, செஞ்ஞாயிறு என்புழி, செம்மை யென்னும் அடை அங்ஙனமின்றி இருக்கும் சூரியன் ஒன்றே யாதலால் வேறு பிரித்துக்காட்ட வேண்டாது ஞாயிறு இத்தகையது என அதன் பண்பை மட்டும் விளக்குதற்கு இயை பின்மை நீக்கவரும் அதுபோல் தமிழ் ஞான சம்பந்தன் என்னும் தொடரில் தமிழ் என்னும் சொல், ஞானசம்பந்தர்க்கு, அவரைப்போல ஞானசம்பந்தம் பெற்று விளங்கியவர்கள் வேறு பிறர் எவரும் இலராதலின் பிறிதின் இயைபு நீக்கவந்த அடையல்ல. ஞானசம்பந்தரின் பண்பு இத்தகையது என்று விளக்குதற்கு இயை பின்மை நீக்க வந்ததெனவே கொள்ள வேண்டும். தமிழ்ப் பண்பாடுகள் பலவற்றிற்கும் நிலைக்களனுகத் திகழ் பவர் ஞானசம்பந்தப் பெருமானே என்பதுணரவும்.

மேலும் வடமொழிக்கிலக்கணம் செய்த பாணினி முனிவர் ஒரு தாதுவிலிருந்து மற்ருெரு தாது உண்டாகாதென்ற அம முனி வர் வெட்கித் தலைகுனிய, திருமயிலையில் இருந்த ஒரு தாதுவாகிய எலும்பை மற்ற ஆறு தாதுகளும் வந்து பொருந்தி உயிர்பெற் றெழச் செய்தது நம தெய்வத் திருநெறித் தமிழ் வேறு சிவம் வேறு மக்கள் உணரவும். எத்துணையோ நூற்ருண்டாயதே என்பைப் பெண் ணாக்கி, இன்னந் தண்டமிழ்த் திருமுறையே இன்னதென் றுணராது இந்திக்குச் சே என்பார்களை என்னென்பேம்.

அன்பர்களே!

காஞ்சிபுரத்தில் திருமால் பல நூற்றாண்டு இறைவனை நோக்கி அருந்தவம் புரிந்தனர். இறைவன் இறைவியுடன் இடபமேற்றோன்றி உவணமீதுயர்த்தோய்! நோற்று நொந்தனை வேட்டன நுவலென்றனர் திருமால் வணங்கி ஐயனே! தங்கள் சிவசாரூபம் வேண்டுமென்றனர் உடனே கொடுத்தேகலாம், இறைவன், தமிழ்வேறல்ல தாம்வேறல்ல தமிழேயாம் என்பதையும், திருஞானசம்பந்தரது தேவாரச் செந்தமிழ்ப் பெருமையை மக்களுணரவும் எண்ணி, நன்று தேர்வைவச்சுத மனுவந்தரம் நணுகும் அன்று நாலிரண்டிற்றுடை யிருபதாங் கலியில்

காழிமாநகர் கவுணியர் குலத்தொரு காளை
யேழிசைத் தமிழ் ஞானசம்பந்தனெம் அடியான்
சூழநீபெற யெம்முறு இங்குவந் தளிப்பான
ஆழியோ யதுகாறுமிவ் வரைப்பினி லமர்ந்து

ஈட்டருந்தவம் இயற்றுகென் றருளிநீங் குதலும்
கோட்டமின்றிமா லம்முறை வதிந்துபூங் கொன்றைத்
தோட்டலங்கலாற் றெழப்புகும் முத்தமிழ் விரகர்
பாட்டலங்கலாற் பரஞ்சுடர்த் திருவுருப் பெற்றான்.

இவண் இருந்து இருபத்தெட்டு கலியுகம் தவஞ்செய்திரு காழியில வதரித்த எம் அடியார் திருஞானசம்பந்தர் வருவார் சாரூபம் தருவாரென்றருளி இறைவன் மறைந்தருளினர். திருமால் அவ்வாறே இருபத்தெட்டு கலியுகம் வரை நோற்று தமிழ் ஞானசம்பந்தப் பெருந்தகையாரது அற்புத தெய்வத் திருநெறித் தமிழ்ப் பதிகத்தால் சாரூபம் பெற்றாரென்பது காஞ்சிப் புராணம். இதனாலும் தெய்வத் திருநெறித் தமிழே சிவம் என்பதை மக்கள் உணரவும். (தொடரும்)

குறிப்பு.

"துறவி" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரே பக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15-க்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

அவிரோத வுந்தியார்.

தவத்திரு. சுவாமி முக்தானந்தா அவர்கள்,
சங்கமூர்த்தி ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை

முன் (ம 1 இ 4 ப 46) தொடர்ச்சி.

இவற்றுள், 'விடுதலாகிய அறமோ'?–மேலாகிய பரம பொருளே உண்மைப் பொருள், அது தவன்றிப் பொறிகளாற் காணப்படும் உடம்பு முதலிய இவையாவும் மயக்கத்தால் தோற்றுகின்றன. இவை உடல், பொருள், ஆவியென்ற மூன்றன் விரிவே யாகும். இம் மூன்றையும், உள்ளபடி நானல்ல, என்னுடையவும் அல்ல, என்று விட்டு விடுதலே தானமென்று கூறப்படுகின்ற 'விடுதலாகிய' அறமாகும். இந்த விடுதலாகிய அறம், கைவரப் பெற்றவனை, என்றும், எவ்விடத்தும், தனதெனும் உரிமை தாக்கி மயக்க மாட்டாது.

நோற்றலாவது :—பொறிகள் யாவும் புலன்களை நோக்கி, மின்னொளியைக் காட்டினும் விரைந்து பாய வல்லன. இது, பல பிறவியில் பழகி வந்த பழைய பழக்கம். அப்பழக்கத்தை எதிர்த்து, அங்ஙனம் பாய விடாமல் தடுத் தடக்குதலே, தவத்திற்கு முதலாவதான இயல்பு பொறிகள் தாமே புலன்கள் மேல் பாய வல்லவை யல்ல. மனமே அவற்றைச் செலுத்துகின்றது. இம் மனதை, அப்பொறி வழிப் போகா வண்ணந் தடுப்பது, நோன்பின் அடுத்த வியல் பாகும். இங்ஙனந் தடுக்கப்பட்டால், மனந்தடைக்குட்பட்டு நிற்குந் தன்மை வாய்ந்ததன்று. அதனால் மனத்திற்கு வேறு வேலை வகுக்க வேண்டும். அவ் வேலை, உள்ளீடாகவே அமைதல் வேண்டும். இது நோன்பின் மூன்றாவது இயல் பென்னலாம். உள்ளீடாகச் செலுத்தப் பட்ட வேலையின் பயனை யடையும் மட்டும், இடைவிடாமல் செலுத்திக் கொண்டே யிருத்தல் வேண்டும். இங்ஙனம், மனம் உட்செல்லுங்கால், பொறிகள் தம்பாகன் போக்கை மீறிப் புறத்தே செல்ல வியலாமல் வலியிழந்து, செயலற்றுக் கோளில் பொறிகளாக ஆகிவிடுவனவாம்.

இந்நிலையில், அடங்கிய பொறிகள், வெதும்பும். அவ் வெப்பத்தால் உளதாந் துன்பத்தைப் பொறுத்தல் நோன்பு. அப் பொறிகள் அடக்கப்படின் அவற்றின் கோளகங்கள் சூடேறும்; அச்சூட்டால் உறுந் துன்பங்களைப் பொறுத்தல் நோன்பு.

இனிப் பொறி புலன்கள், மீண்டும் போர் தொடங்குதற் கிடந்தராமல் மாரியில் நீரினுள் மூழ்கித் தவமியற்றல், ஐம்பெருந்தீ, மூத்தீ, கோடையில் கதிரவன் எரிக்க அதின் முன் நிற்றல், ஊண் துறத்தல், ஒரு பகலுண்டல், அரைமதி யுண்ணாமை, முழு மதியும் ஊண் துறத்தல். இவற்றால் உளவாந் துன்பங்களைப் பொறுப்பது நோன்பு.

இன்னும் உலகவர் வெறுக்குமாறு, உடையின்றி புலாவல், அழுக்குக் கந்தை யணிதல், பேய்போல் ஓரிடமின்றித் திரிதல், பிணம் போற் கிடத்தல், இட்ட பிச்சை யெல்லாம் நாய் போலருந்தல், இன்னும் பலவும், நோற்பவர்கள் தமது நோன்பிற்கு இடர் நேரா வண்ணம் செய்யுஞ் செயல்களாகும். இவை யனைத்தும் நோற் பாரின் அறிகுறி.

இத்துணைச் செயல்களும், உள்ளீடான பரம் பொருட் காட்சி கைவர வேண்டி, தளரா உறுதியுடன் நிற்கின்றவர்க்குத் தான், தானும் பிறவுந் தோன்ரு நிலை உளதாகும். தானும் பிறவுந் தோன்ருமை யால், யான் செய்தேன், பிறர் செய்தா ரென்ற நன்மை தீமைகள் தோன்ற மாட்டா. பரம் பொருள் மட்டுமாய் நிலைத்திருக் குந்தன்மை நோன்பின் முடிந்த முடிபாகும் இதுவே தவம்

ஈண்டு ஈதல் நோற்றல் கட்கு கூறப்பட்ட இயல்பு, வீட்டிற் குரியன வாகவின் "வீடே" அறமெனல் ஆகும்

இதனைத் தான் அவிரோத வுந்தி தெளிய விளக்கியுள்ளது.

அவிரோத வுந்தியார்:—

தாங்குபற் றற்ற சகலத் தியாகத்தின்
ஓங்கு தருமமே துந்தீ பற
உள்ளது வீட்டிற்கஃது உந்தீ பற. என்று

இதன் கருத்தைக் காட்டும் மேற்கோள்கள் :—

அருட் பிரகாசம்:—

"நிறைந்த பொருளொடு ஆக்கைதம் ஆவியை நீடருளால்
உறைந்த குருகரத் தேதத்தஞ் செய்தவற் றுள் ஒன்றனையும்
மறந்தும் யானெனது என்னுது இறைகழல் மன்னிநிற்கும்
சிறந்த சகலத் தியாகரினேர், அறஞ் செய்தவரே".

பூரண சித்தி:—

"சகமென உடலமென்னத் தருகரணங்கள் என்ன
அகமென இதம்அதுஎன்ன அழிவில்போ கங்கள்என்ன
வகைபட உயிர்கட்காதல் மாயைஅம் மாயை நீக்கிப்
புகலறு முத்திசேரும் அவர்கள் புண்ணியத்தி னேரே"

(புண்ணியம்—அறம்)

(தொடரும்)

யோக சிகோப நிஷத்—தமிழ் மொழிப்புரை.

தவத்திரு. திரிமூர்த்தி சுவாமிகள்,
(ஆனந்தாச்சிரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 4 ப 47) தொடர்ச்சி

யோகமானது பிராணுபானன்களை ஒன்ருக்குவதும், சந்திர சூரியர்களைச்சேர்த்து வைப்பதுமாகும். மற்றும், வெப்பத்தால் ஏழு தாதுக்கள் வடிவ உடலை விரைவில் சிவக்கச்செய்கின்றது என்பது அறிக. மற்றும் உடலுக்கு நோய்களும், வெட்டுதல், புதைத்தல் முதலியனவும் ஒழிகின்றன. ஆகையால் அத்தகைய யோக சித்தியுடையவன் பெருவெளியுருக் கொண்டு நிற்கின்ருன். மீண்டும் விரித்துரைப்பதாற் பயன் என்? அவனுக்கு மரணமென்பதே இல்லை. அவன் எரிந்த கற்பூரம் போன்று தானே உருவிழந்து நிற்பன். ஆயினும், உலகில் உடலோடு உள்ளவன் போன்று காணப்படுகின்ருன் (ம. 58)

(அ....கை) யோகப்பயிற்சியுள்ள மனத்திற்கே ஆன்மஞான முண்டாமெனக் கூறல்.

பிரம்மாவே! சித்தமானது பிராணனுல் உண்டுபண்ணப்பட்டதாய், எல்லாச் சீவர்களிடத்திலும் நிலைபெற்றுள்ளது. கயிற்ருல் நன்கு கட்டப்பட்ட பறவை, எங்ஙனமோ, அங்ஙனம், இம்மனம் பிராணனுற் கட்டப்பட்டுள்ளது. பல்வேறு சாத்திரச் சிந்தனைகளால் மனம் தடுக்கப்படமாட்டாது. ஆகையால், அதை வெல்லும் வழி பிராணனைத் தடுப்பதால் சித்திப்பதாகும். வேறு வழியால் ஆவதன்று. அதுவும் சித்தர்கள் வழியன்றி, வேறு கேள்விகளால், பேச்சுக்களால், சாஸ்திரக் கூட்டங்களால், யுக்திகளால், மந்திரங்களால், மூலிகைகளால் பிராணன் ஒடுங்கமாட்டாது. அச்சித்தனது வழியை அறியாது, யோக நெறியில் முயல்கின்றவனுக்கு, துண்டித்த அறிவால் மிகுந்த அலுப்பே பயனுக முடிகின்றது. யோகத்தைப் பயில்பவர்களுள், எவன் காற்றை வெல்லும வழியறியாது யோகத்தை விரும்புகின்ருனே, அவன் வேகாத மட்குடத்தைப்பற்றி, கடலைத்தாண்ட விரும்புகின்றவனுவன். உயிருடன் உள்ளபொழுது எவனுக்குப் பிராணன் உள்ளத்து ஒடுங்கியதாமோ, அவனுக்கு இவ்வுடலாகிய கூடு விழுவதில்லை. சித்தம் குற்றங்களால் தாக்கப்படுவதுமில்லை. (ம. 64)

(அ....கை) முதலில் யோகப்பயிற்சியே கற்கவேண்டுமெனக் கூறல்.

பிரம்மாவே! தூயசித்தமுள்ளவனுக்கே ஆன்ம அறிவு ஒளிருகின்றது. அந்தச் சித்தத் தூய்மை, யோகப்பயிற்சியால் உளதாகின்றது. அச்சித்தத் தூய்மையால், ஞானம் ஒரு பிறவியில் உண்டாகின்றது. ஆகையால், நன்முயற்சியுடன் எப்பொழுதும் அந்த யோக நெறியைப் பழகுவானாக. வீடுபெறும் வேட்கையுள்ளவர்களால், முதலிற் பிராணனது வெற்றியே விரும்பத்தக்கது. யோகத்தினும் மிகச்சிறந்தது தூய்மை. யோகத்தினும் மிகச்சிறந்தது நலம். யோகத்தினும் மிகச்சிறந்தது நுண்மை. ஆகையால் யோகத்தினும் மிகச்சிறந்தது இல்லை. எவன், பிராணுபானன்களின் சேர்க்கையை அறிவனே, அவன் சுக்கிலரஜசுகளின் சேர்க்கையை அறிவன் எவன் சூரிய சந்திரர்களின் சேர்க்கையை அறிவனே, அவன் ஜீவான்ம பரமான்மாக்களின் ஐக்கியத்தை அறிவன் என்பது அறிக. இவ்வாறு இருவகைக் கூட்டத்தின் சேர்க்கையே யோகமெனச் சொல்லப்பட்டது. (ம 68)

(அ....கை) இனி யோகத்தின் முடிபு கூறல்.

ஞானங்கள் எவற்றினுஞ் சிறந்த யோகத்தின் முடிபு கூறுகின்றேன் கேட்பாயாக, ஒருவன், பதுமாசனத்திலோ, அல்லது பிரியமான ஆசனத்திலோ அமர்ந்து, கைகால்களை ஒடுக்கி, பார்வையை மூக்கு நுனியிற் செலுத்தி, மனதை எங்கும் செல்லாது தடுத்து, அம்மனதில் எப்பொழுதும் பிரணவமந்திரத்தை ஜெபிப்பானாக. அங்ஙனம் ஜெபிப்பதால், முதலில் உடல் நடுக்கமுள்ளதாகின்றது. அறிஞர்கள் பிரணவவடிவ சிவனை இதயத்தில் வைத்து இடையறாது சிந்திக்கின்றார்கள். இதயத்தில் ஒளிக்கிரணங்களாற் சூழப்பெற்ற சூரியன் உளன், அச்சூரியன் உருண்டை வடிவமானவன். சூரியன் நடுவில் அக்கினி உளது. அவ்வக்கினியை விளக்கின் திரியிலுள்ள சுடர்போன்று எரியச்செய்வானாக. அச்சுடரில், சிவத்தைத் தியானஞ் செய்வானாக. அங்ஙனஞ் செய்யும்பொழுது பிரம்ம நாடியாகிய ஒரு தூணுள்ளதும், ஒன்பது வாயிலுள்ளதும், மூவினையாற் கட்டியதும், ஐம்பூதவடிவானதும், ஐந்து தேவதைகளையுடையதுமான இந்த உடலாகிய வீட்டில் அறிஞன் கருத்தைச் செலுத்தாது இருப்பானாக. (ம. 74)

(அ...கை) யோகப்பயிற்சியால் முடிவிடம் பெறுகின்றான் எனக்கூறல்.

யோகிகள் யோகப்பயிற்சியாலேயே சூரியனைத்துளைத்துச் செல்லுகின்றனர். பின்னர் அவர்களுக்கு மிகத்தூய்மையான சுழுமுனைவழி கிடைக்கப் பெறுகின்றது. அவ்வழியிற் சென்று தலையிலுள்ள அமுத மண்டலத்தைப்பருகுகின்றனர். பிறகு தத்பதவடிவ சிவத்தை அறிவாற் கலந்து இன்புறுகின்றனர். (ம 75)

வேண்டுகோள்.

திருவுயர். T. N. பரிமணம் பிள்ளையவர்கள் சீகாழி.

"அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே"

என்றார் தென்னாட்டுத் தலைசிறந்த துறவி பட்டினத்தடிகளார்.

என்பதற்கிணங்க தமிழ் நாட்டில் நிலவ அவாவுற்று வெளிவரும் அருந் "துறவி"யை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருமேனி பெற்றுலவச் செய்து குழந்தை போன்று வளர்ப்பது அறிவான் மேம்பட்ட இல்லறத்தார்க்கு முரிய தாகும். மிக்க அருமை வாய்ந்த இம்மனிதப் பிறப்பின் சிறப்பு, தன்னையுமுணர்ந்து தலைவனையுந் தன் உள்ளத்தே கோவிலாகக்கொண்டு அனுபவவாயிலாகக் கண்டு, இரண்டறக் கலந்து, பிறவா வண்ணம் பெரும்பே றடைவதையே, செயற்கரிய செய்வர் பெரியோர் என்று பெருமைப்படக் கூறி யுள்ளதாகும்.

'காடே திரிந்தென்ன காற்றைப் புசித்தென்ன கந்தை சுற்றி, யோடே யெடுத்தென்ன உள்ளன்பி லாதவர் ஓங்குவிண்ணோர், நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால், வீடே யிருப்பினு மெஞ்ஞான வீட்டின்ப மேவுவரே" என்பதற் கிணங்கவும், மெய்ஞ்ஞானிகள் திருவள் ளுவர் போன்று என்னிலையினு முள்ளவராதலின், "இல்வாழ்வா னென்பானியல் புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" என்பதையும் உணர்ந்து இல்லற ஞானிகளும் துணைவராவ தென்பதை மனதிற்கொண்டு சந்தாதாரராக ஆர்வங் கொள்வது உரிமையாகும். இக்காலம், பல சஞ்சிகைகள், கற்பனை குய்யுக்திகள் நிறம்பப் பெற்றனவாகவும், நல்லொழுக்கம், நன்னெறி புகட்டுவதற்கும் சிறப்பற் றனவாகவும் வெளிவருதைச் சிந்திக்க, மக்கள் அறிவு தாழ்ந்த நிலைக்குச் செல்ல அறைகூவி அழைக்கின்றன வாகவும் இருந்து வருகிறது. அவைகள் சார்பில் மனம் அவமே செல்வதை நல்வழியிற் சாந்தி பெறச் செய்ய முற்படுவது அவசியமாகும் "வந்த வரவை மறந்து மிக்க மாதா பொன் பூமிமயக்கத்திலாழும் இந்த மயக்கை யறுக்க எனக்கெந்தை மெஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான்" என்று தன் மகிழ்வைப் பறைசாற்றியுள்ளார் தாயுமானவர். மேற்செய்யுள் திடம் பெறும் வண்ணம் "ஒன்றென் றிரு தெய்வமுண்டென் றிரு வுயர் செல்வமெல்லாம் அன்றென் றிரு" என்பதற்கொவ்வ இறைவனென் றுளன். என்பதை விசாரபூர்வ மாகத் திடஞானங்கொண்டு தனக்குத் தானாகவே உண்மை உணர்வுபெற்று, கலந்து மேலிடும் பேரின்ப சாகரத்தி லாழ்த்திய விநோதங்களைச் சுகானுபவ தவசிரேஷ்ட ராயுள்ள பலமுனிவர்கள் வைத்துப்போன ஞான பொக்கிஷங்களின் கருத்துகள் பலவற்றையும், உபநிஷத்து முதலாகவுள்ள ஞான நூற்களின் சாரங்களையுந் திரட்டி வந்து வருஷிக்குங் கொண்டலாகச் செயலாற்ற முன்வந்துள்ள இச் சஞ்சிகையை வளர்ச்சி யடையுமாறு அறிவாளிகள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவித்துத் தழைக்கச்செய்வதும் கடமையாகுமென தெரிவித்துக்கொள்கிறேன்

அச்சுரிமை: ந. வேணுகோபலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை.
ஆசிரியரும், வெளியிடுபவரும்; சுவாமி சொருபானந்தா, கீழ்பாலூர்.